# விமரிசகன் படும் பாடு

(சுப்புடு)

வேறு எந்தத் தொழிலுக்கும் லாயக்கில்லாதவன் விமரிசகனாகப் போவான் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். கட்டின வீட்டிற்குப் பழுது சொல்வது சுலபம், கட்டிப் பார்த்தால் தெரியும் என்பது முதுமொழி.

சுமார் 35 வருடங்களாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் விமரிசனம் எழுதி வருகிறேன். என்னுடைய அனுபவங்களை நேயர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற வெகு நாளைய அவாவைப் பூர்த்தி செய்து கொள்ள எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என் மனமார்ந்த நன்றி.

விமரிசனக் கலை இந்தியாவுக்கு புதியது. வெளி நாடுகளில் இது ஒரு இன்றியமையாத அம்சம். அந்நாட்டில் விமரிசகர்களுக்கு தரப்படும் கௌரவமும் ஊதியமும் தெரிந்தால் மலைத்துப்போய் விடுவீர்கள். அரங்கங்களில் அவர்களுக்குத் தனியான, குறிப்பிடப்பட்ட ஆசனம் உண்டு. அவர் வராவிட்டாலும் அது காலியாகத்தான் இருக்கும்.

அவர்களுக்கு ஒரு Pre-view (முன்னோட்டம்) கூட போட்டுக் காட்டுவார்கள். நிகழ்ச்சியைக் கடுமையாக விமர்சித்து விட்டால் அவ்வளவுதான் அது அதோகதி தான்.

ஆனால் ஒன்று, அவர்கள் சகலகலா வல்லுனர்கள். விஷயம் தெரிந்தவர்கள். தாம் கையாளும் விஷயத்தைப் பற்றி நிறையப் படித்து, தம்மைத் தயார் செய்து வைத்திருப்பார்கள். ஆதலால் அவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதைக்கு அவர்கள் அருகதையானவர்கள்.

இங்கே பார்க்கிறோம். போலீஸ் கோர்ட்டு நிருபர்தான் கச்சேரிக்கு வருவார். லால்குடி வாசிப்பில் தேன் ஒழுகிற்று என்று வரிந்து தள்ளிவிடுவார்கள். வயலினில் தேன் ஒழுகினால் எப்படி வாசிப்பது?

ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. எனக்குத் தெரிந்த விமரிசகர் ஒருவர் அகாடமி மத்தியானக் கச்சேரிக்கு வந்திருந்தார். பந்தலில் அன்று ஒரு இளம் பாடகர் ஜி. என். பி. பாணி ஆசாமி பாடினார்.

ஜி. என். பி. சீடர்கள் கோபாலகிருஷ்ண பாரதியின் 'சேவிக்கவேண்டும்' என்ற ஆபோகி ராக கீர்த்தனையை ஆந்தோளிகாவில் பாடுவார்கள். அவுட்வாணம் விட்டாற் போலிருக்கும்.

கச்சேரி முடிந்தது.

விமரிசகர் சும்மாயிருந்திருக்கலாம். கச்சேரிக்குப் பின் பாடகரைச் சந்தித்து சபாஷ் போட்டார். சம்பாஷணை பின் வருமாறு அமைந்தது.

"………ரா! சேவிக்க வேண்டும் கனகிராண்டு."

"எல்லாம் உங்களைப் போல பெரியவா ஆசீர்வாதம்."

"ரொம்ப நாளைக்கப்புறம் இன்னிக்குத் தான் ஆபோகியின் உண்மையான சொரூபம் பார்த்தேன். ஆபோகியை அப்படியே பிழிந்து தள்ளிட்டே போ."

"அப்படியா! தன்யோஸ்மி. நானே எழுதச்சே இதைப் பத்தி ஒரு வரி போட்டேள்னு என்னைப் போல இளம் பாடகர்களுக்கு ஊக்கம் கிடைக்கும்."

"நிச்சயமாய்."

அடுத்த நாள் பத்திரிகையில் விமரிசகரின் பேனு விளையாடியது.

"எல்லோரும் தான் ஆபோகி பாடுகிறார்கள். என்ன பயன். நேற்று, கோபாலகிருஷ்ண பாரதியின் ஆபோகி கீர்த்தனையை ........பாடினார் பாருங்கள், அப்படியே ஆபோகி உயிர் பெற்றெழுந்து வந்து விட்டது."

எப்படி ?

மேற் கூறிய சம்பவம் கிண்டலாக எழுதப் பட்டதல்ல. அதில் ஒரு தத்துவம் அடங்கி உள்ளது.

விமரிசகன் பொறுப்புள்ளவனாக இருக்க வேண்டும். எவ்வளவோ இன்னல்களுக்கிடையே குருகுல வாசம் செய்து தன் ஞானத்தைப் பறைசாற்ற வருகிறான். விஷயம் தெரியாமல் அவனைத் தாக்கவோ தூக்கவோ முயல்வது எவ்வளவு விபரீதமாக முடியும் என்பதை விளக்க மேற்கூறிய சம்பவத்தைக் குறிப்பிட்டேன்.

இயல், இசை, நாடகம், முதலிய கலைகள் சம்பிரதாயம் வழுவாமலிருக்க பாதுகாப்பது விமரிசகனின் தலையாய கடமை. சம்பிரதாயம் என்பது ஒரு கட்டுப்பட்டியான விஷயம் அல்ல. தினே தினே சூழ்நிலைக்கு ஏற்ப மாறுவது. ஆனால் அடிப்படை இலக்கணம் பிசகக்கூடாது.

இப்போது பாருங்கள். மோகன ராகத்தை ஸ்வச்சமாகக் கேட்பதே அபூர்வமாகி விட்டது. எந்த வேளையில் மகானுபாவன் மகாராஜபுரம் அதில் ப்ரதிமத்யமத்தின் சாயையும் கைசிகி நிஷாதத்தின் சாயலையும் புகுத்தி அதை 'பூப்' ஆக்கினாரோ அன்று வந்தது வினை. இப்போது நாம் கேட்பது மோகன கல்யாணி; மதுரை மணியோடு மோகனம் போய்விட்டது.

பாலமுரளியோடு நான் பல முறை போர் தொடுத்து உதைவாங்கியுள்ளேன்.

தென்னாட்டிலில்லாத அபரிமிதமான சாரீரம், நல்ல ஞானம்.

ஆனால் எடுத்த எடுப்பில் வாசஸ்பதியா, கல்யாணியா, ஹரிகாம்போதியா என்று நிர்ணயிக்க முடியாத ஒரு குழப்பம்.

முதல் ப்ரயோகத்திலேயே ராகச் சாயல் பளிச்சிட வேண்டும். அது தான் இலக்கணம். இதை எடுத்துச் சொன்னால் அவர் சபையிலேயே விமரிசகரை இழிவு படுத்திப் பேசுகிறார்.

எவ்வளவு துர்பாக்கிய நிலை பாருங்கள்.

தூக்கிவைத்து எழுதினால் " ஆகா! ............வைப்போல் உண்டா " என்பார்கள் வித்வான்கள். குறை சொன்னால் "ஞானம்கெட்ட பயல், பேனா இருக்கிறதென்று கன்னாபின்னா என்று எழுதுகிறான் " என்பார்கள்.

விமரிசகனும் தெய்வப்பிறவி அல்ல. அவனும் மனிதன் தான். தவறு ஏற்படும்.

ஆனால் முறை என்ன ?

வித்வானோ ரசிகர்களோ அபிப்பிராய பேதமிருந்தால் ஆசிரியருக்கு எழுதவேண்டும். அதற்கு விமரிசகர் பதில் எழுதவேண்டும். கலை வளரும்.

எனக்கு ஞாபகம் இருக்கிறது.

ஒரு முறை நான் சந்திர ஜோதியை மேளகர்த்தா ராகம் என்று அவசரத்தில் எழுதி விட்டேன்.

எங்கேயோ குக்கிராமத்திலிருந்து ஒரு இளம் பெண்மணி இந்தத் தவற்றைச் சுட்டிக் காட்டி எழுதியிருந்தார்கள்.

புளகாங்கிதமடைந்தேன். ஏனெனில் ஏதோ காமா சோமா என்று வரைந்து தள்ளிய என் எழுத்தை மதித்துப் படித்து, குறை சுட்டிக் காட்டி எழுதிய மாதுஸ்ரீக்கு நான் நன்றி தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

"நெற்றிக் கண்ணைக் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்று எழுதியதாக ஞாபகம்.

சாரீர சம்பத்து சம்பந்தப்பட்டவரை தென்னாடு பூஜ்யம். இதைப் பன்முறை வலியுறுத்தியுள்ளேன். ஏனெனில் இந்த அசிரத்தையின் பலன் விபரீதமாகி வருகிறது.

தென்னாட்டில் பர்வீன் சுல்தானாவுக்கு ஏக டிமாண்ட். நமது வித்துவான்கள் கனவிலும் கண்டிராத ரேட் வாங்குகிறார் பர்வீன். காரணம் அவருடைய கர்ணாமிர்த சாரீரம்.

ஒரு நாளுக்கு ஏழு மணி நேரம் அசுர சாதகம். அகார சாதகம்.

நெஞ்சில் கையை வைத்துச் சொல்லுங்கள், நமது வித்துவான்களில் எத்தனை பேர் இம்மாதிரி சாதகம் செய்கிறார்கள்? கச்சேரி நேரம் போக பாக்கி நேரமெல்லாம் வம்புதான். எல்லோருடைய மண்டையையும் உருட்டுவதில் பொழுது போகிறது.

இத்தனைக்கும் வடநாட்டு இசையில் விஷயம் கிடையாது. சாகித்திய மேன்மை கிடையாது. ஸ்வரப் பிரஸ்தாரம் கிடையாது. நமது இலக்கணத்திற்கு முன் அது ஈடாகாது.

இருப்பினும் நம்மவர்கள் ஓடோடிப் போய் கேட்கிறார்கள்.

காரணம்?

உதவுபடி. சுருதி சுத்தம்.

நம்மவர்களை சுருதி சுத்தமாகப் பாடக்கூடாது என்று யார் தடுத்தார்கள்?

தியாகராஜர் "சொகசுகா மிருதங்க" என்று ஸ்ரீரஞ்சனியில் பொழிந்து தள்ளியுள்ளாரே!

நமக்கு சிரத்தையில்லை.

பிஸ்மில்லாக்கானையே எடுத்துக் கொள்ளுங்கள். என்ன பிரமாத கீர்த்தனையை அவர் வாசித்துத் தள்ளுகிறார்? வெறும் தெம்மாங்கு.

ஆனால் வாத்தியத்தை எடுத்து விட்டால் நாதமயம். அது என்ன கன்ட்ரோல் ஐயா? மயக்கி வருகிறார்.

நம்ம நாதஸ்வர மேதைகளில் ராஜரத்தினத்திற்குப் பின் உருப்படியாக யாராவது தோன்றினார்களா?

ஒரே பிசிறுமயம். ஏன்? உழைப்பு கிடையாது. காரணம் கேட்டால் "சீவாளி பதம் ஆக வேண்டும்" என்பார்கள். அதைவிட வேறு என்ன வேலை என்று நான் கேட்கிறேன்.

கர்நாடக சங்கீதம் பெரிய பொக்கிஷம். அதற்கு அழிவு வரக்கூடாது. அதைப் பழைய படி அதன் மகோன்னத ஸ்திதிக்குக் கொண்டு வரவேண்டும். பாடகர்களுக்கு இது விஷயத்தில் எவ்வளவு பொறுப்போ அவ்வளவு பொறுப்பு விமரிசகர்களுக்கும் உண்டு.

இருவரும் தத்தம் கடமைகளை உணர்ந்து கொண்டு செயலாற்றினால் கர்நாடக இசைக்கு விமோசனம் உண்டு.

என்னுடைய அனுபவத்தில் நான் இந்த நோக்கில் தான் பணியாற்றி வருகிறேன். என்னைப் புரிந்து கொள்ளாதவர்கள் என் எழுத்திற்கு மாசு கற்பிக்கிறார்கள். அது என் துர்பாக்கியம்.

